தமிழ் செய்தி அறிக்கை
நாள்;04.02.12 நேரம் காலை 7.15-0725

ஆகாசவாணி
செய்திகள் ; வாசிப்பவர் - வெங்கட்
உதவி - சுந்தரராமன்

தலைப்புச் செய்திகள்.

1. மணிப்பூரில் ஐந்து மாவட்டங்களில் இருக்கும் 34 வாக்கு சாவடிகளில் இன்று மறு வாக்குப்பதிவு நடைபெறும்.

2. உச்சநீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, 2ஜி அலைக்கற்றையை ஏலத்திற்கு விடும் பணியை, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் நேற்று தொடக்கியுள்ளது.

3. வீட்டுக்கடன்களை கொடுக்கும் போது, வீடுகளின் விலையை மிக அதிகமாக மதிப்பிடுவதை தவிர்க்குமாறு வர்த்தக வங்கிகளை இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

4. நேற்று மெல்பர்ன் நகரில் நடைபெற்ற இந்திய ஆஸ்டிரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் இறுதி 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இனி விரிவான செய்திகள்

**MANIPUR:**
மணிப்பூரில் ஐந்து மாவட்டங்களில் இருக்கும் 34 வாக்கு சாவடிகளில் இன்று மறு வாக்குப்பதிவு நடைபெறும். 28 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்களார்கள் இன்று தமது வாக்குரிமையை செலுத்துவார்கள். கடந்த மாதம் 28 ஆம் தேதி இந்த தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவின் போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் செயல்படாத காரணத்தினால், இங்கு மறு வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும். சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 6 ஆம் தேதி எண்ணப்படும்.

**UP POLLS:**
உத்தரபிரதேச மாநிலத்தில் முதற்கட்ட சட்டப்பேரவைத்தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய இரண்டு நாட்களே இருக்கின்றன. வாக்குப்பதிவு இம்மாதம் எட்டாம் தேதி நடைபெறும். முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் முழு வீச்சில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் தேர்தல் நடைபெறும். முதல் மூன்று கட்டங்களில் தேர்தல் நடைபெறவிருக்கும் தொகுதிகளில் தேர்தல் பணிகளிலும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதனிடையே ஐந்தாம் கட்ட தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும். இது வரை மொத்தம் 718 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு இம்மாதம் 23 ஆம் தேதி நடைபெறும். நான்காம் கட்ட தேர்தலில் போட்டியிடும்

வேட்பாளர்கள் யார் யார் என்பது இன்று மாலை தெரிந்து விடும். இதற்கிடையே, கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டிருக்கும் பறக்கும் படையினர் கணக்கில் காட்டப்படாத 32 கோடி ரூபாயை விட அதிக பணத்தை பறிமுதல் செய்துள்ளனர். இது தொடர்பாக 200க்கு அதிகமானவர்களுக்கு வாரண்ட் அனுப்பப்பட்டுள்ளது.

**TRAI :**

2 G அலைக்கற்றை ஏலம் தொடர்பான நடவடிக்கைகளை, நேற்று, தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை அதிகார அமைப்பு- TRAI தொடங்கியது. 22 கோட்டங்களில், 2G அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான கலந்தாலோசனைக்கு முந்தைய ஆவணத்தை, ஏலம் மூலமாக TRAI வெளியிட்டது. அனைத்து பங்குதாரர்களும், இம்மாதம் 15ம் தேதிக்குள் கருத்துக்களை முன்வைக்குமாறு, TRAI கேட்டுக் கொண்டது.
வழங்கப்பட்ட 122 தொலைத் தொடர்பு உரிமங்களை ரத்து செய்து, 2 G அலைக்கற்றை விவகாரத்தில், புதிதாக ஏலம் நடத்துமாறு உச்ச நீதி மன்றம் உத்திரவிட்ட ஒரு நாளிற்கு பிறகு, TRAI, இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
ஏலம் மூலமாக மட்டுமே அலைக்கற்றை ஒதுக்கீடு செய்வது குறித்த மத்திய அரசின் குறிக்கோளிற்கு இணங்கி செயல்படுமாறு, TRAI அமைப்பை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு பணித்துள்ளது.
உரிமங்கள் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு குறித்து, TRAIயிடமிருந்து புதிதாக பரிந்துரைகளை வேண்டுமாறு, அரசையும், உச்ச நீதி மன்ற தீர்ப்பு பணித்துள்ளது.
இதனிடையே, மத்திய வேளாண் துறை அமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான
திரு.ஷரத் பவார், பிரதமருக்கு ஆதரவு அளித்து, 2 G உரிமங்களை ரத்து செய்து உச்ச நீதி மன்றம் அளித்த உத்திரவு, அரசை குறைகூறுவதாக ஆகாது என்றும் கூறியுள்ளார். மும்பையில், நேற்று, செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரதமர் தமது கடமையை செய்துள்ளதாக உச்ச நீதி மன்றம் கூறியுள்ளதாகவும், அவருக்கு எதிராக உச்ச நீதி மன்றம் எந்த ஒரு உத்திரவையும் பிறப்பிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.
ஆனால், 2 G அலைக்கற்றை ஊழலால், செயல்பாடு முறைக்கும், அரசிற்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக, அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

**PM**

பொதுவாழ்வில், ஊழலை குறைக்கவும், ஒளிவுமறைவற்ற தன்மையையும், பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்தவும், சீரான அணுகுமுறையின் அவசியத்தை பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார். புதுதில்லியில், நேற்று தலைமைசெயலர்களின் இரண்டு நாள் மாநாட்டை துவக்கிவைத்துப்பேசிய பிரதமர், நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட குடிமக்கள் சாசன மசோதாவானது, அரசுத்துறைகளிலிருந்து சேவைகளை கோரிப்பெறும் உரிமையை பொதுமக்களுக்கு அளித்திடும் என்று டாக்டர் மன்மோஹன் சிங், தெரிவித்தார். கொள்முதல் பணிகளை ஒழுங்குபடுத்த சட்டம் இயற்றும் பணியும் நடைபெற்று வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். அரசின் முந்தைய முன் முயற்சிகளுக்கு இது ஊக்கமளிக்கும் என்றும் அவர் சொன்னார்.

**ARMY CHIEF**

இராணுவத் தலைவர் ஜெனரல். வி. கே. சிங், தமது பிறந்த ஆண்டை 1950-லிருந்து 1951 என்று திருத்துமாறு விடுத்த வேண்டுகோளை அரசு மறுத்த விதம் குறித்து, உச்சநீதிமன்றம் நேற்று கேள்வி எழுப்பியது. இது தொடர்பான அனைத்து செயல்களும் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதாகத் தோன்றுவதாக அது கூறியது. அடுத்த வெள்ளிக் கிழமையன்று இவ்வழக்கு தொடர்பான விசாரணை நடைபெறும் என்றும், திரு. சிங்கின் புகாரை மறுக்கும் கடந்த ஆண்டு டிசம்பர் 30 தேதியிடப்பட்ட தனது ஆணையை திரும்பப் பெற்றுக்கொள்ளும் எண்ணம் உள்ளதா என்றும், உச்சநீதிமன்றம் அரசிடம் கேட்டுள்ளது

**PATEL – SCRIBE :**

மத்திய அமைச்சர் திரு. Praful Patelற்க்கு எதிராக லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டியதை தெரிவித்த கனடா நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர், அமைச்சர் லஞ்சம் வாங்கியதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்று, Twitter இணைய தளத்தில் தெரிவித்துள்ளார்.Stephanie Nolen என்ற அந்த பத்திரிகையாளர், திரு. Patelற்கு எதிராக இந்தியாவில் பிறந்த கனடா நாட்டு பிரஜையான Nazir Karigar முன்வைத்த குற்றச்சாட்டைதான் எழுதியிருந்ததாக தெளிவு படுத்தினார்.

திரு.Patelற்கு லஞ்சம் வழங்கிய வழக்கில், Karigarன் மீது, கனடாவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இதில்,

முன்னாள் மும்பை காவல் துறை தலைவரும் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. 2007ம் ஆண்டு ஏர்- இந்தியாவின் வழக்கு ஒன்றில், திரு.Praful Patel லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருப்பதை, விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.Ajit Singh, ஏற்கனவே நிராகரித்துள்ளார். தமது மீதான குற்றச்சாட்டுகள், ஆதாரமற்றவை என்று, திரு. படேலும் நிராகரித்துவிட்டார்.

**RBI – LOANS :**

வர்த்தக ரீதியில் செய்லபடும் வங்கிகள், வீட்டுக்கடன் வழங்கும் போது, வீடுகளின் விலையை அளவிற்கு அதிகம் மதிப்பிடுவதை தவிர்க்குமாறு, இந்திய ரிசர்வ் வங்கி - RBI – கேட்டுக் கொண்டுள்ளது. மும்பையில், நேற்று வெளியிடப்பட்ட அறிவிக்கையில், சில வங்கிகள், முத்திரைத் தாள் வரி, பதிவு மற்றும் மற்ற ஆவங்களின் கட்டணங்களை, வீட்டின் விலையில் சேர்த்துக் கொள்வதாகவும், இதனால், விட்டின் மதிப்பு , அளவிற்கு அதிகமாக காட்டப்படுவதாகவும், RBI கண்டறிந்துள்ளது.

இந்த நடைமுறையை பின்பற்றுவதால், குறிப்படப்பட்டுள்ள வங்கிகளுக்கு கிடைக்கும் லாபம் குறைகிறது என்று, அந்த அறிவிக்கை தெரிவிக்கின்றது.

அதனால், கடன் வழங்கும் போது, இவ்வித கட்டணங்களை, வீடுகளின் மதிப்பில் சேர்ப்பதை வங்கிகள் தவிர்க்குமாறும், மதிப்பிற்கு ஏதுவாக கடன் வழங்குவதற்காக விதிக்கப்பட்ட விதிமுறைகள் பாதிக்கப்படாமல் இருக்க செயல்படுமாறும், RBI வங்கிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

**SC – PDS :**

அரசினால் ஏழைகளுக்காக துவங்கப்பட்ட உணவுத் திட்டத்தை தக்க விதத்தில் அமல்படுத்த, மத்திய அரசில், செயலர் நிலை அதிகாரி ஒருவரை , நேற்று, உச்ச நீதி மன்றம் நியமித்தது. பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கி,

கையாள்வது, ஊழல் போன்ற நடவடிக்கைகளை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளில், அதிகம் முன்னேற்றம் காணப்படவில்லை என்று, அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.
பொது வினியோகத் திட்டத்தின் கீழ், உணவு தானியங்களை
ஏழை எளியோருக்கு வினியோக்கிக்க, நுகர்வோர் துறை, உணவு மற்றும் பொது வினியோகத் துறை அமைச்சகத்தின் செயலரை, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு உச்ச நீதி மன்றம் பணித்துள்ளது.

## GUJARAT LOKAYUKTA

குஜராத் மாநில லோகாயுக்தா நீதிபதியாக மேஹ்தா நியமிக்கப்பட்டதை சரியானது என்று மாநில உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக, நீதிபதி ஆர். எ. மேதா, மாநில ஆளுனரின் தலைமைச் செயலர் மற்றும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்துக்கு உச்சநீதி மன்றம் நேற்று நோட்டிஸ்களை பிறப்பித்துள்ளது. மாநில அரசை கலந்து ஆலோசிக்காமல், நீதிபதி மேஹ்தாவை ஆளுனர் நியமித்தது சட்ட விரோதமானது என்று மாநில அரசின் வழக்குரைஞர் வாதிட்டார். அரசியல் சாசனத்தில் கூட்டாட்சி முறைக்கு எதிரானது என்றும் அவர் கூறினார்.

## DELHI – ARREST :

இந்திய முஜாஹிதீன் அமைப்பின் நிறுவன உறுப்பினர் என்று தம்மைத் தாமே கூறிகொண்ட பிஹார் மாநிலத்தை சேர்ந்த ஒருவரை, தில்லி காவல் துறை கைது செய்துள்ளது.
Mohd. Tarique Anjuman என்ற அவர், கடந்த வியாழக்கிழமை, Patnaவின் புறநகரப் பகுதியிலிருந்து கைது செய்யப்பட்டு, தில்லி அழைத்து வரப்பட்டார். தலைமை பெருநகர மாஜிஸ்ரேட் முன் ஆஜர்படுத்தப்பட்ட அவர், 15 நாள் காவல் துறை கைதில் வைக்கப்பட்டுள்ளார்.

## NAXAL:

பழங்குடிப்பகுதிகளில், நக்சல் பாதிப்பை குறைப்பதற்காக, அரசு ஆறு திட்டங்களை அமல்படுத்தவிருக்கின்றது. மூங்கில், கோந்து, அரக்கு போன்ற பொருட்களை நல்ல விலைக்கு இவர்கள் விற்று பணம் ஈட்ட முடியும். இந்த திட்டங்களை அரசு, தனியார் துறை, பஞ்சாயாத்துக்கள் ஆகியவை இணைந்து தயாரிக்கலாம் என்றும் இவை அடுத்த ஆறு மாதங்களுக்குள் அமல்படுத்தப்படும் என்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஜெய்ராம் ரமேஷ் சொன்னார்.

## CRICKET

நேற்று மெல்பர்ன் நகரில் நடைபெற்ற இந்திய ஆஸ்டிரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் இறுதி 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி 19.4 ஓவர்களில்அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ரன்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய இந்திய அணி 19.4 ஓவர்களில் 2

விக்கெட் இழப்பிற்கு 135 ரன்களை எடுத்தது. இந்த போட்டித் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு புள்ளிகளை பெற்றுள்ளன.

INDIA US:

தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய விஷயங்களில் ஒத்துழைப்பை மேற்கொள்வது குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்த உடன்படிக்கையில், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை அமைச்சர் திரு மல்லிகார்ஜுன் கார்கேயும், அமெரிக்கா தொழிலாளர் நலத்துறை அமைச்சர் Hilda L. Solis ஆகியோர் கையெழுத்திட்டதாக, அரசு செய்தி குறிப்பு தெரிவிக்கிறது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய விஷயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தவும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் இந்த உடன்படிக்கை வகை செய்கிறது. திறன் வளர்ப்பு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, பணியிடத்தில் பாதுகாப்பு, சுரங்கப்பணிகளில் பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய விஷயங்கள் இந்த ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் அடங்கும். இதனால், இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படும் என்று, திரு கார்கே தெரிவித்தார்.

SYRIA KILLED:

சிரியாவில், நேற்று, அதிபர் திரு பஷார் அல் அசாத்தின் ஆதரவாளர்கள், போராட்டக்காரர்கள் மீது நடத்திய துப்பாகி சூட்டில், இரண்டு குழந்தைகள் உள்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். இரண்டு குழந்தைகள், கலாச்சாரா மையத்திற்கு அருகே நிகழ்ந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த சம்பவத்தினால் மக்கள் அதிக ஆத்திரமடைந்திருப்பதாக இந்த கண்காணிப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது. சிறையில் உயிரிழந்த ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள சுமார் பத்தாயிரம் பேர் திரண்டிருந்தாகவும் அப்போது இந்த சம்பவம் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PAK BLAST:

பாகிஸ்தானில், பெஷாவர் நகரில், தாலிபான் எதிர்ப்பு பழங்குடித்தலைவரின் வீட்டிற்கு வெளியே நிகழ்ந்த சக்திவாய்ந்த கார் குண்டு வெடிப்பில், 3 பேர் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பில், அருகிலிருந்த வீடுகளும் தனியார் அலுவலகம் ஒன்றும் சேதமடைந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

US PAKISTAN:

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உறவில் பதற்றம் நிலவுவதாலும் சமீபத்தில் அங்கு நிகழ்ந்திருக்கும் சம்பவங்களாலும் பாகிஸ்தானுக்கு செல்வதில் இருக்கும் அபாயம் குறித்து அமெரிக்கா, தமது குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. நேடோ நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தானிய படைவீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, பாகிஸ்தானில் பேரணிகளும் போராட்டங்களும் நடந்து வருவதாலும் இவை நிகழும் இடங்களை தவிர்க்குமாறும் அமெரிக்க வெளியுறவுத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

CHINA EU:

சீனாவுக்கு ஐரோப்பாவை வாங்கும் எண்ணமும் கிடையாது, வாங்கும் அளவுக்கு திறனும் கிடையாது என்று சீனப்பிரதமர் திரு வன் சியாபாவ் தெரிவித்துள்ளார். ஆனால், தற்போது ஐரோப்பிய யூனியனில் நிலவும் நிதி நெருக்கடியை எதிர்த்து போராட சீன தயாராக இருப்பதாக குறிப்பிட்டார். வெளிநாட்டு பணத்தின் கையிருப்பு உலகிலேயே மிக அதிகமாக, சீனாவில்தான் இருக்கிறது. ஐரோப்பிய யூனியன், சீனாவில், மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகவும் திகழ்கிறது. சீனாவின் Guangdong மாகாணத்தின் தலைநகரில் ஜெர்மனி நாட்டு பிரதமர் Angela Merkel யும் வர்த்தக பிரதிநிதிகளையும் சந்தித்து பேசிய சீனப்பிரதமர் இதனை தெரிவித்தார்.

LANKA:

இலங்கை தனது 64 ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகிறது. அனுராதபுரத்தில், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காவல்துறையினர், முப்படையை சேர்ந்த வீரர்கள் உள்பட 2600 க்கும் அதிகமானோர் இன்றைய அணி வகுப்பில் கலந்து கொள்வார்கள்.

EUROPE COLDWAVE :

செர்பியாவின் உள்ளடங்கிய பகுதிகளில், ஐரோப்பாவில் நிலவி வரும் கடும் குளிர் தாக்கியதால், குறைந்தது 11 ஆயிரம் கிராமவாசிகள், நாட்டின் மற்ற இடங்களிலிருந்து துண்டிக்கப்பட்டதோடு, 130ற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். உக்ரெயினில்தான், பலர் உயிரிழந்துள்ளனர். செர்பியாவில் 6 பேர் உயிரிழந்தனர். ஐரோப்பாவின் பல பகுதிகளில், உரைபனிக்கும் கீழே – 30 டிகிரி செல்ஷியஸ் நிலவி வருவதால், உக்ரெயினில் 63 பேரும், போலந்து நாட்டில் 29 பேரும் உயிரிழந்துள்ளனர். இத்தாலியில், கடந்த 27 ஆண்டுகளில் கண்டறியாத விதமாக மிகவும் கடுமையான குளிர் இந்த வாரம் நிலவியதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பல இடங்களில், உரைபனி, 2 மீட்டர் ஆழமாக உள்ளது.

KUWAIT ELECTION :

குவைத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இஸ்லாமியத் தலைமையிலான எதிர்கட்சிகள் வெற்றி பெற்றன. 50 உறுப்பினர் கொண்ட தேசியச் சபையில், 34 இடங்களில், எதிர்கட்சிகள் வெற்றி பெற்றன. மகளிர் வேட்பாளர்கள் ஒருவர் கூட, இத்தேர்தலில் வெற்றி பெறவில்லை. கடந்த சட்டப்பேரவையில், எதிர்கட்சிகள் 20 இடங்களை மட்டுமே பெற்றிருந்தது. வெற்றி பெற்ற கூட்டணி, ஊழலை ஒழிக்கவும், எண்ணெய் வளம் கொண்ட குவைத்தில் சீர்த்திருத்தங்களை எதிர்போரின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தப் போவதாகவும் தெரிவித்தது.

US SANCTION :

ஈரான், அணு குண்டு பெறுவதை தடுக்க, அந்நாட்டிற்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க, உலக அளவில் ஆதரவு பெறுவதுதான்

ஒரே வழி என்று, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் Leon Panetta, நேற்று தெரிவித்தார். ஜெர்மனியில், அமெரிக்க விமானப் படையினரிடையே பேசிய அவர், ஈரான், தனது முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால், தேவைப்பட்டால், அமெரிக்கா பதிலடி கொடுக்க தயாராக உள்ளது என்றார். ஈரானுடன், இஸ்ரேலின் உத்தேசிக்கப்பட்டுள்ள சண்டையில், அமெரிக்கா எந்த தருணத்தில் பங்கேற்கும் என்று விமானப் படையினர் வினவியபோது, Panetta,இவ்வாறு பதிலளித்தார்.

## IRAN – CLAPPER :

ஈரான், அமெரிக்க மண்ணில் முன் எப்போதும் இல்லாத விதமாக, தாக்குதல் நடத்த தற்போது தாக்குதல் நடத்த ஆர்வமாக இருப்பதாக, அமெரிக்க தேசிய உளவுத் துறையின் இயக்குனர் திரு. James Clapperன் குற்றச்சாட்டுகளை, ஈரான் மறுத்துள்ளது.இதனை, ஈரானிய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் Ramin Mehmanparast தெரிவித்தார். டெஹ்ரானில், ஈரானிய விஞ்ஞானிகள் கொல்லப்பட்டதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள், இவ்வாறு தவறான குற்றச்சாட்டுகளை செய்ய அனுமதிக்கக்கூடாது என்றார் அவர்.

## KENYA :

சொமாலியாவில், al-Shabab அமைப்பின் போராளிகளின் மீது, துப்பாக்கி ஏந்திய ஹெலிகாப்டர்கள் நடத்திய தாக்குதலில், கிட்டத்தட்ட 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக, கென்யாவின் இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். Badhade என்ற இடத்திற்கு அருகே al-Shabab அமைப்பின் 20 வாகனங்களின் மீது, நேற்று, தாக்குதல் நடத்தப்பட்டதாக, Maj. Emmanuel Chirchir தெரிவித்தார்.